OUTREACH Volume IX 2016 360 – 364
A Multi - Disciplinary Refereed Journal
ISSN (Print) : 0975 1246
ISSN (Online) : 2321 8835
www.voccoutreach.in

# இலக்கியமும் நுண்கலைகளும்

க.கிருஷ்ணவேணி, தமிழ்த்துறை, வ.உ.சிதம்பரம் கல்லூரி, தூத்துக்குடி

**முன்னுரை:**

இலக்கியத்தை நுண்கலைகளுடன் ஒப்பிடும் ஆய்வு உள்ளத்தைத் தொடும் வகையில் பரந்து விரிந்துள்ளது. கலைகளுக்குப் பயன்படுத்தப்படும் கலைச் சொற்களிலே ஒற்றுமை உண்டு. எழுத்து, வடிவம், சந்தம், உயிருள்ள படைப்பு, புலன்களுக்கு விருந்தாதல் என வருவன பல காணலாம். எழுத்து என்பது சிற்பத்தையும் குறித்ததுண்டு. “இன்ன பல பல எழுத்து நிலை மண்டபம்” (பரிபாடல் 19:53) என்று திருப்பரங்குன்றத்து ஓவிய மண்டபம் சிறப்பிக்கப் பெறுகிறது.

“கடவுள் எழுத ஓர் கல்கொண்டு அல்லது, வறிது மீளும் என வாய்வாள் ஆகின்” (சிலம்பு 26:14–15) என்று சிலம்பில் இடம்பெறுகிறது. இங்கு ‘எழுத’ என்பது ‘செதுக்க’ என்றே பொருள்படுகிறது. தமிழில் இவ்வாறு ‘எழுத’ என்ற ஒரே சொல் ஓவியமாகத் தீட்டுதல், சிற்பமாகச் செதுக்குதல், இலக்கியமாகப் படைத்தல் ஆகிய மூன்று பொருளையும் தருவது இக்கலைகளிடையே உள்ள ஒற்றுமையைக் காட்டுகின்றன.

ஓவியம், சிற்பம், இசை, ஆடல் போன்ற நுண்கலைகளை ஒப்பிடும்போது கணக்கற்ற தலைப்புக்களிலும் ஆராய இடம் ஏற்படுகிறது. அவற்றை மூன்று வகைகளுக்குள் கொணர்தல் கூடும்.

1. வடிவத்தினாலும், உட்பொருளினாலும் அவைகளுக்கு இடையேயுள்ள உறவை ஆய்வது
2. ஒன்றின் தாக்கத்தைப் பிறவற்றில் காண்பது
3. அவை ஒன்றினொன்று உள்ளடங்கி எங்ஙனம் ஒரே இனமாகின்றன எனக் காண்பது. (Comparative Literature P.181)

**அகத்தெழுச்சி**

நுண்கலைகள் நமக்கு அகத்தெழுச்சியை நல்கிக் கவிதைகளைப் படைக்க வைக்கின்றன. சிற்பங்களைப் பார்த்ததும் அச்சிற்ப அழகுணர்ச்சியால் உந்தப்பட்டு நாம் கவிதைகளை விரைந்து படைத்து விடுதல் கூடும். இனிய இசை கேட்டதும் கவிதை தானே மலர்வதுண்டு. கூத்தப் பெருமான் இடது காலைத் தூக்கி ஆடும் சிற்ப அழகைக் கண்டதும் அப்பாடிகளுக்குப் பாடல் புனையும் அகத்தெழுச்சி உண்டாயிற்று என்பர். அப்படியே சிற்பத்தைக் கண்ணெதிரே கொணரும் பாடல்

"குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியில் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே" (தேவாரம்)

என்பதாகும்.

'இனித்தமுடைய எடுத்தபொற் பாதம்' என்றவுடன் தூக்கியத் திருவடிச் சிற்பம் நம் கண் முன்னர்த் தோன்றுவதை உணரலாம்.

**பாட்டுப் பொருள்**

கவிஞர்கள் சிலவேளைகளில் நுண்கலைகளை ஓவியம், சிற்பம் ஆகியவற்றைப் பாட்டுப் பொருளாக்கிக் கொள்வதும் உண்டு. இயற்கையையும், மக்களையும் பாடுவது போலக் கவிஞர்கள் சிற்பத்தையும், ஓவியத்தையும் இசையையும் கூடச் சித்தரித்துள்ளனர் "கிளாட் லோரோன் வரைந்த ஒரு குறிப்பிட்ட ஓவியத்தை வைத்து கீட்ஸ் தமது கிரேக்க நாட்டுத் தாழிப்பாடலுக்கு உரிய விளக்கங்களைக் கொண்டார்" என்ற செய்தியை அறியலாம். (இலக்கியக் கொள்கை (மொ.பெ) ப–181)

**தமிழ் இலக்கியத்தில் ஓவியமும் சிற்பமும்**

தமிழ் இலக்கியத்தில் சிற்பம், ஓவியம் ஆகியவற்றைப் பாடிய பல பாடல்கள் இடம் பெறுகின்றன. மணிமேகலையில் காவிரிப்பூம்பட்டினத்தின்கண் உள்ள மாடமாளிகைகளின் வெளிப்புறச்சுவர்களில் தீட்டி வைக்கப்பட்டிருந்த ஓவியங்களின் சிறப்பு எடுத்துரைக்கப்படுகிறது. சுடு–மண்ணும், செங்கல்லும் வைத்துக் கட்டிய மனைதோறும், குற்றமற்ற திருவுருவத்தை உடைய வானவர் முதலாக இவ்வுலகிலுள்ள எல்லா உயிர்களையும் உவமம் காட்டி உயிர் உள்ளன போலச் சுண்ணாம்பு தீற்றிய சுவர்களில் ஓவிய வித்தகர்கள் விளக்கமுறத்தீட்டி வைத்திருந்த செய்தி

"சுடுமண் ஓங்கிய நெடுநிலை மனைதொறும்
மையறு படிவத்து வானவர் முதலா
எவ்வகை உயிர்களும் உவமம் காட்டி
வெண்சுதை விளக்கத்து வித்தகர் இயற்றிய கண்கவர் ஓவியம்"

(மணிமேகலை 3: 127–131) என்ற பாடலில் இடம் பெறுகிறது. "ஓவியச் செந்நூல் உரைநூல் கிடைக்கையும்" என்று ஓவியம் பற்றித் தனி நூல்கள் இருந்தமையை மணிமேகலை குறிப்பிடுகின்றது.

**நெடுநல்வாடையில் ஓவியப்பாங்கும் சிற்பத்திறனும்**

நெடுநல்வாடையை ஓவியப்பாட்டு அல்லது சிற்பப்பாட்டு என்று கூறலாம். பாண்டிமாதேவி தன் தலைவனது பிரிவால் வருந்தி அவலமுற்றிருக்கும் நிலையை

'புனையா ஓவியம் கடுப்ப' என்று கூறிய நக்கீரர், இப்பாடலின் முதலடியிலிருந்து இறுதியடிவரை ஓவியப்பாங்கை நினைவு கொண்டு பாடியுள்ளார். அவருக்கு ஓவியம், சிற்பம், கட்டிடக்கலை ஆகியவற்றில் இருந்த ஈடுபாடும் நெடுநல்வாடையால் உணரப்படுகிறது அரண்மனை கட்டுவதற்குக் கால்கோள் செய்யப்பட்டது முதல் கோட்டை வாயில், முற்றம், அந்தப்புரம், வட்டக்கட்டில், அதன் விதானம், படுக்கையின் அமைப்பு ஆகியவற்றையும் அவர் சிற்ப உத்தித்திறனோடு புனைந்துள்ளார். அரசிபடுத்திருந்த கட்டிலின் மேல் விதானத்தில் மெழுகு பூசிய துணியில், ஆட்டின் பெயருடைய மேடராசி முதலாக ஏனை இராசிகளிலும் சென்று இயங்கும் விரைந்து செல்லும் இயக்கத்தைக் கொண்டவன் கதிரவன். அவனுடன் மாறுபட்ட இயக்கமுடையதும் தலைமையுடையதும் ஆகிய திங்களஞ் செல்வனொடு நிலைபெற்று உரோகிணியாகிய விண்மீன் திகழ்வது காதலர் அருகிலிருக்கும் காட்சி போல அழகுற வரையப்பட்டிருந்த செய்தியை,

"புதுவது இயன்ற மெழுகுசெய் படமிசை
திண்நிலை மருப்பின் ஆடுதலை யாக
விண்ஊர்பு திரிதரும் வீங்குசெல் மண்டிலத்து
முரண்மிகு சிறப்பின் செல்வனொடு நிலைஇய
உரோகிணி ................................. " (நெடுநல்வாடை 159–163)

என்ற பாடல் மூலம் அறியலாம்.

கட்டிற்காலில் உருண்டு திரண்டிருக்கும் குடம் போன்ற உறுப்பைத் "தூங்கு இயல் மகளிர் வீங்கு முலை கடுப்ப, புடை திரண்டிருந்த குடத்த" (நெடுநல்வாடை 120–121) என்கிறார். "அசையும் தளர்ந்த நடையினையுடைய மகளிர்" என்பதால் "கருக்கொண்ட மகளிர்" என்பதைக் குறிப்பாக உணர்த்திருக்கும் அழகிலேயே சிற்ப நுட்பம் உள்ளது என்பதை அறியலாம்.

விளக்கில் எரியும் சுடரின் பருத்த தீக்கொழுந்துகள் தெற்கு நோக்கி வளைந்து சாய்ந்து எரிவது வாடைக்காற்று வீசுவதைக் காட்டுகிறது என்பதனை

"வடந்தைத் தண்வளி எறிதொறும் நுடங்கி,
தெற்கு ஏர்பு இறைஞ்சிய தலைய, நன் பல
பாண்டில் விளக்கில் பரூஉச் சுடர் அழல" (நெடுநல்வாடை 173–175)

என்ற பாடல்வரிகள் மூலம் எடுத்துரைக்கிறார். இங்ஙனம் சிற்பத்திறன் உடைய பல பகுதிகள் வருவதால் நெடுநல்வாடையைச் சிற்பப் பாட்டு என்றும் அழைக்கலாம்.

பரிபாடலில் மதுரையாம் மாடக் கூடலில் ஒரு மாளிகையின் மாடத்தில் செய்து வைக்கப்பட்டிருந்த சிற்பம் பற்றிய செய்தி இடம் பெறுகிறது. வைகை நீர் விழாவில் மகளிர் பிடிகளின் மேலேறி நீராட விரைந்தனர். அப்போது எழில் மிகுந்த

மாடங்களில் கையால் உருவாக்கப்பட்ட புலிச்சிற்பம் இருப்பதை உண்மையான புலியென்று அஞ்சிப் பிடிகள் அங்குமிங்கும் பாய்ந்து ஓடலாயின. அதனால் அவற்றின் மீது அமர்ந்திருந்த மகளிர் அஞ்சி நடுங்கிய செய்தியை

"–––––––––––––––––––– எழில் மாடத்துக்

கைபுனை கிளர் வேங்கை காணிய வெருவுற்று,

மை புரை மடப்பிடி, மடநல்லார் விதிர்ப்புற,

செய் தொழில் கொள்ளாது, மதி செத்து, சிதைதர" (பரிபாடல் 10:45–48)

என்கிறார்.

"மரத்தை மறைத்தது மாமத யானை

மரத்தின் மறைந்தது மாமத யானை" (திருமந்திரம் 2290)

என்று திருமூலர் சிற்பத்தின் நுட்பத்தை எடுத்துக்காட்டி மெய்ப்பொருள் விளக்கம் தருவதை அறியலாம். இங்ஙனம் சித்திரங்களைப் பாடும் ஒரு மரபும் இருந்தமையால் குறிஞ்சிக் கலியில் கபிலர் பாடியுள்ள ஒரு கற்பனை இதுபோல் அமைந்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. "இரு புறமும் ஒளிபொருந்திய, அழகமைந்த பரந்த மலைச்சாரல். அங்கு எதிரெதிராய் ஓங்கி நிற்கும் இரண்டு பக்கமலைகள் அவற்றினிடையே முதிர்ந்த பூங்கொத்துக்களைக் கொண்ட முழவுபோல் திரண்ட அடியினையுடைய நெருப்பனைய வேங்கைமரம். அதன் கிளைமேல் அதிர்ந்து , ஒலித்து விழும் அருவி இவ் இனிய காட்சி இயற்கை விருந்து காதலருக்கு ஒரு சித்திரத்தை நினைப்பூட்டியிருக்கிறது. இக்காட்சி திருக்கோயில் வளமனை முதலியவற்றின் மேற்படியில் கல், மரச்சிற்பங்களாக செதுக்கவும் பெற்றிருக்கும். இம்மரபு இன்றும் உள்ளது என்பதை அறியலாம். கவிஞரும் இவ் இனிய காட்சியினை

அழகிய புள்ளிகள் பொருந்திய மத்தகத்தோடு விளங்கும் இரு யானைகள் இரு பக்கங்களிலும் நிற்க, நடுவே திருமகள். இரண்டு பக்க மலைகளுக்கு இடையேயுள்ள வேங்கை அவ் இலக்குமி போலக் காட்சியளிப்பதைக் கபிலர் பாட்டுப் பொருளாக்கி இருப்பதை

"கதிர்விரி சுனை சுடர்க் கவின்கொண்ட நனஞ் சாரல்

எதிர் எதிர் ஓங்கிய மால்வரை அடுக்கத்து

அதிர் இசை அருவி தன் அஞ்சினை மிசை வீழ,

முதிர் இணர் ஊழ்கொண்ட முழவுத்தாள் எரி வேங்கை

வரி நுதல் எழில்வேழம் பூ நீர் மேல் சொரிதர,

புரிநெகிழ் தாமரை மலர் அம்கண் வீறு எய்தி

திரு நயந்து இருந்தன்ன தேம்கமழ் விறல்வெற்ப" –(கலித்தொகை 44:1–7)

என்ற பாடல் மூலம் அறியலாம்.

இலக்கியமும் நுண்கலைகளும்

“ஓவியத்தையே பாட்டுப் பொருளாக்கிய தொன்மை மிக்க தமிழ்க் கவிதை என்று இதனைக் கொள்ளலாம்” என்பார் டாக்டர் தமிழண்ணல்

ஓவியத்தையே கவிதையில் பாடுவது என்பது கடினமாயினும் அதனைப் பாராட்டும் முகமாகவோ உவமையாகவோ ஆங்காங்குத் தமிழ்க் கவிஞர்கள் பாடியுள்ளனர். சிறந்த ஓவியத்தைப் பற்றியோ, நுட்பமிகு சிற்பத்தைப் பற்றியோ, அதன் உறுப்பு நலன்களை அழகை வெளிப்படுத்தும் வகையில் கவிதை புனையும் மரபு இருந்திருக்கின்றது என்பதை அறிந்து கொள்ளலாம்.

**முடிவுரை:**

இலக்கியத்தில் நுண்கலைகளினால் ஏற்படும் தாக்கம் நுட்பமானது, மறைமுகமானது. ஒரு நாட்டுப் பொதுப்பண்பாடு, நாகரிகம், அறிவுக் கூர்மை, நுட்பத் திறன் போல்வன அந்நாட்டு நுண்கலைகள் பலவற்றிலும் ஒரு தன்மையாகக் காணப்படும் பிற கலைகளைக் காட்டிலும் இசையும் ஆடலும், ஓவியமும் இலக்கியத்தோடு மிக நெருங்கிய தொடர்புடையன. செய்யுள் இசையின் உறவால் இசைப்பாவாக மாறிவிடுகிறது என்றும் இலக்கியம் ஓவியத்தின் உறவால் எழுத்தோவியமாக மாறிவிடுகிறது என்றும் கூறலாம்.

**துணை நின்ற நூல்கள்**


1. முனைவர் அ.மா. பரிமணம் & முனைவர் கு.வெ. பாலசுப்பிரமணியன் (பதிப்பாசிரியர்கள்) பரிபாடல் நெடுநல்வாடை, கலித்தொகை சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட் 2004
2. ந.மு. வேங்கடசாமி நாட்டார் (உரையாசிரியர்), சிலப்பதிகாரம், சென்னை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், 1999.
3. Mercy Gaither,’Literature and the Arts, Newton P.Staalknecht and Horst frenzy(ed), Comparative Literature, London, 1971.
4. வ.த.இராமசுப்பிரமணியம் (உரையாசிரியர்), வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, 2002.
5. ரெனி வெல்லாக்கு & ஆஸ்டின் வாரன், இலக்கியக் கொள்கை, குளோரியா சுந்தரமதி (மொ.பெ), பாரி நிலையம், சென்னை, 1966.
6. ந.மு.வேங்கடசாமி நாட்டார் (உரையாசிரியர்), மணிமேகலை, சாரதா பதிப்பகம் சென்னை, 2007.
7. திரு.மாணிக்கவாசகன் (உரையாசிரியர்), திருமூலர் திருமந்திரம், உமா பதிப்பகம், சென்னை, 2003.
8. தமிழண்ணல், ஒப்பிலக்கிய அறிமுகம், சோலை நூலகம், மதுரை, 1978.